இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 123 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 27 – புதன்கிழமை 13 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 123 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 27 - Wednesday 13 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00

# உறவு வேலி உறுதிப்பட திரண்டு வாரீர்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ‘இளைஞர்களுக்கு வழி விடுவோம்’ எனும் தலைப்பில் முரசொலி’யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 ‘கலைஞர் கடிதங்கள்’ எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தவிருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

## கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் மாநில மாநாடு நெல்லையிலே நடைபெறும்போது, தமிழக இளைஞர்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக பல்வேறு தகவல்களையும், செய்திகளையும் தொகுத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், நேற்றைய கடிதத்தில் நெல்லைச் சீமையிலே முதன் முதலாக வெள்ளையரை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பிய பூலித் தேவனைப் பற்றி குறிப்பிட்டு, தி.மு.கழக ஆட்சியில் அந்த மாவீரனுக்கு சிலை அமைத்ததையும், அவர் வாழ்ந்த நெற்கட்டும் செவல் கிராமத்தில் அவரது இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக ஆக்கியதையும் குறிப்பிட்டிருந்தேன்.

“நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும் நெற்கட்டும் செவல் கோட்டையன்றோ?” என்று புகழ்ந்து பாடப்படும் அந்த ஊருக்கு நான் நேரில் சென்று பூலித்தேவன் மாளிகையின் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டேன். அப்போது நான் ஆற்றிய உரையின் சில பகுதிகளை வருங்கால இளைஞர் சமுதாயம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே தந்துள்ளேன்.

“இப்போது நடைபெறுகின்ற நிகழ்ச்சி சுதந்திரப் போராட்ட மாவீரன் பூலித் தேவனுடைய வீரத்தை நினைவுபடுத்த, அவன் வீரம் மிக்கவன் மாத்திரமல்ல, விவேகம் மிக்கவன் மாத்திரமல்ல, கருணை உள்ளவன், அன்பு உள்ளவன், பகைவரையும் மன்னிக்கக் கூடிய பண்பாளன் என்ற இந்தச் செய்திகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, அதைப்போல நாமும் வீரம் மிக்கவர்களாக, விவேகம் மிக்கவர்களாக, நம்முடைய தாய் நாட்டுப் பற்றுள்ளவர்களாக, மண்ணின் மைந்தர்களாக, எதிரிகளுக்கு இடங்கொடுக்காதவர்களாக, அதே நேரத்தில் பகையைக் கூட பண்போடு மன்னிப்பவர்களாக இருந்திட வேண்டும் என்ற அந்தச் செய்தியை சொல்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சி.

இந்தியாவிலே, குறிப்பாகத் தமிழ்நாட்டிலே, 17 ஆண்டு காலம் போரிட்ட ஒரு பாளையக்காரன் உண்டென்றால் அது மாவீரன் பூலித்தேவன்தான். அவன் கட்டிய கோட்டையை இன்றைக்கு அதன் அடையாளம் மாறாமல் புதுப்பித்து ஏறத்தாழ, 3 இலட்ச ரூபாய் அந்தப் பூலித்தேவனின் உறவினர்களுக்கு அந்த மனையைப் பெறுவதற்காக அரசு சார்பில் வழங்கி, மேலும் ஐம்பது இலட்ச ரூபாய் செலவிட்டு திருமண மண்டபம், தர்பார் மண்டபம், பூலித்தேவனுடைய சிலை, நூலகம், காட்சியகம் அத்தனையையும் இங்கே அமைத்திருக்கிறோம்.

இந்தப் பூலித் தேவனுடைய பெயரை அடிக்கடி நினைவூட்டி பூலித் தேவனுக்கு சிலை எழுப்ப வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த மாளிகையை முன்பிருந்தவாறே மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டும் என்று என்னை வலியுறுத்தியவர் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

குறிப்பாக அருமை நண்பர் சீனிச்சாமி தேவர், டாக்டர் ராமகிருஷ்ணன், நண்பர் எல்.சந்தானம், நண்பர் வல்லரசு மற்றும் தி.மு.கழகத்தைச் சேர்ந்த தம்பி ஆலடி அருணா போன்றவர்கள், தம்பி தங்கவேலு போன்றவர்கள் - அத்தனை பேருமே தேவர், தேவர் அல்லாதோர் என்கிற பாகுபாடு இல்லாமல், பூலித் தேவனுடைய மாளிகையை இங்கே புதுப்பிக்க வேண்டும், இந்தக் கோட்டையை மீண்டும் கட்டித் தர வேண்டும், சிலை எழுப்ப வேண்டும் என்று என்னை பல முறை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு முன்பே வெள்ளையனை எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த பூலித் தேவன், 1715ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 16ஆம் நாள் பிறந்தார். 1715 முதல் 1767 வரை 53 ஆண்டுகள் வாழ்ந்தார். அதற்குள்ளாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு அவர் உயிர் துறந்தார். அவருடைய இயற் பெயர் காத்தப்ப துரை. ஆறு வயது சிறுவனாக இருந்தபோது திண்ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தார். 12வது வயதிலேயே குதிரையேற்றம், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு, வாள் வீச்சு, அம்பு எறிதல், கவண் எறிதல், வல்லயம் எறிதல் ஆகிய போர்ப் பயிற்சிகள் பெற்றார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், வைரச் சிலை போன்ற உடற்கட்டும் கொண்டவர் பூலித்தேவர் என்று வருணிக்கப்படுகிறார்.

வீரம், நேர்மை, தன்மான உணர்வு இவற்றின் வடிவம்தான் பூலித் தேவர். அது மாத்திரமல்ல, கொடை உள்ளம் கொண்டவர் என்பதற்கு அடையாளமாக ஏழை, எளியோர்களுக்கு அடிக்கடி அன்னதானமும், புத்தாடைகளும் வழங்கும் பழக்கவழக்கமுடையவர். சாலை வசதிகளைச் செய்து மக்கள் பணியாற்றினார்.

ஏழையெளியவர்கள் தங்கிட மண்டபங்கள் பல கட்டி, அந்த மண்டபங்களிலே ஏழை எளியவர்களுக்கு உணவளித்தார்.

குளங்கள், கிணறுகள், ஏரிகள் அமைத்து வேளாண்மையை வளர்த்தார். பல கோயில்களுக்குத் திருப்பணியும் செய்துள்ளார்.

ஆர்க்காட்டு நவாபுதான் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு முதன் முதலாகக் கதவைத் திறந்து விட்டவர். அந்த நவாபின் முதல் ஆங்கிலத் தளபதியின் பெயர் அலெக்சாண்டர். அவர் நெல்லைச் சீமைக்கு வரி வசூல் செய்ய வந்தார். அப்போது “கப்பம் என்ற பெயரால் ஒரு சல்லிக் காசும் கட்ட முடியாது” என்று அடித்துச் சொன்னவர்தான் பூலித் தேவர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## இரவு பகல் பாராது உறக்கமின்றி ஓயாது உழைத்த

# தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி மனமார்ந்த பாராட்டு!

**சென்னை, டிச.13-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கிய குப்பை மற்றும் தோட்டக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 15 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.**

தமிழ்நாட்டில் ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டது. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டார்கள்.

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கிய மக்களை மீட்டு பாதுகாப்பாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், மருந்து, போர்வை, பாய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், மழைக்காலங்களில் ஏற்படக்கூடிய நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேங்கிய குப்பை மற்றும் தோட்டக்கழிவுகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3449 தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபாய், என மொத்தம் 1 கோடியே 37 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 15 தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், ஆர். மூர்த்தி, ஜே.ஜே. எபினேசர், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.